சுற்று நிருப இலக்கம் :- **PE/2024/38**

TR - 05

எனது இலக்கம் :- TR/PE/ 2024/CIR
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
2024.10.17.

**அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்,**
**பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும்**

**பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14**
**வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக் கொள்ளலும், கொடுப்பனவு செய்தலும்**

2024.11.14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது தங்களுடைய மாவட்டத்தின் போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக முடிந்தவரை அரச வாகனங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு தயவு செய்து நடவடிக்கையெடுக்கவும்.

02. வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற தேர்தல் பணிக்குழுவினரின் போக்குவரத்து வசதிக்காக முடிந்த வரை அரச வாகனங்களையும், மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் பஸ்கள் ஆகியவற்றையும் பயன்படுத்த முடியும். மேலும் உங்களது அனுமதியுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்து வரப்படுகின்ற தனியார் வாகனங்களும் இதன் போது ஈடுபடுத்த முடியும். எனினும் இவ்வனைத்து வாகனங்களும் போதாமற் போகும் சந்தர்ப்பத்தில் தேர்தற் பணிக்குழுவினரின் போக்குவரத்திற்காகவும், வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் போக்குவரத்திற்காகவும் உங்கள் மாவட்டத்தினுள் வாடகை அடிப்படையில் தனியார் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்கள் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், தேவைப்படும் பட்சத்தில் மூன்றாம் தரப்புக் காப்புறுதியுடனான வாகனங்களையும் பயன்படுத்த முடியும். எனினும், விபத்தொன்று நிகழும் சந்தர்ப்பத்தில் அல்லது நட்டமேற்படும் சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழு அதில் தலையிடாது என்பதனை அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். அதற்கான அவர்களது இணக்கத்தையும் எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

03. உங்களால் பெற்றுக் கொள்ளப்படும் வாடகை வாகனங்களுக்கான கட்டணங்கள் பின்வருமாறு வழங்கப்பட முடியும்.

| **ஒரு கிலோ மீட்டருக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணம்** | | |
|---|---|---|
| **வாகனத்தின் வகை** | **பெற்றோல் வாகனம்** | **டீசல் வாகனம்** |
| 08 ஆசனங்களுக்கும் குறைவான வேன் / ஜீப் | ரூபா 125.00 | ரூபா 120.00 |
| 08 - 14 ஆசனங்கள் கொண்ட வேன் | ரூபா 130.00 | ரூபா 140.00 |
| 15 - 25 ஆசனங்கள் கொண்ட வேன் | - | ரூபா 150.00 |
| 26 - 39 ஆசனங்கள் கொண்ட வேன் | - | ரூபா 160.00 |

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்களுக்காக மேற்கூறப்பட்டவாறான கட்டணங்களைத் தவிர, தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிட்ட நேரத்திலிருந்து தெரிவத்தாட்சி அலுவலரால் வாகனத்தை விடுவிக்கும் நேரம் வரையான காலப்பகுதிக்கு தரித்திருத்தல் கட்டணமாக ஒரு மணித்தியாலத்திற்கு 100.00 ரூபா தொகையொன்றை கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

ஏதேனும் விசேட சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட வாகனங்களைத் தவிர, வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற கெப் மற்றும் கார்கள் அவசியப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான விலைப்பட்டியல் தொடர்பாக உங்களது பரிந்துரையுடன் தேர்தல்கள் பணிப்பாளர் நாயகத்தின் முன்னனுமதிக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல்கள் பணிப்பாளர் நாயகத்தின் முன்னனுமதி பெறப்பட்ட பின்னர் கெப் மற்றும் கார்களை கடமைகளிலீடுபடுத்தப்பட வேண்டிய முறைகள் பற்றிய தகவல்களைக் குறித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன், தேர்தல் முடிவடைந்த பின்னர் அத்தகவல்களை தேர்தல்கள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. உங்கள் மாவட்டத்தின் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும்போது, முடிந்த வரை வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தினுள்ளேயே வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதாயின், சாரதிகளுக்கான தங்குமிட வசதிகள், உணவு என்பவற்றை வழங்குவதில் ஏற்படும் சிக்கல்களைக் குறைத்துக் கொள்ள முடியுமென்பதோடு, அவ்வாறு செய்ததன் பின்னரும் மேலும் வாகனங்கள் தேவைப்படின், கொழும்பு ஒதுக்கு குழாத்திலிருந்து வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

05. மேலும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வேன்களுக்காக ஒரு கிலோ மீட்டருக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக இரண்டு நாட்களுக்கான சாரதிக் கட்டணமாக ஒரு நாளுக்கு 750.00 ரூபா வீதம் (தேர்தல் தினத்திற்கு முந்திய தினமும், தேர்தல் தினமும்) 1,500.00 ரூபா விசேட கொடுப்பனவு வழங்க முடியும். 26 ஆசனங்களுக்கும் மேற்பட்ட வாகனங்களின் சாரதி உதவியாளர்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்க முடியும்.

06. மேலும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களை கடமையிலீடுபடுத்தும் சந்தர்ப்பத்தில் தரித்து நிற்கும் இடத்தலிருந்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரது அலுவலகத்திற்கு அறிக்கையிடச் செல்கின்ற போதும், விடுவித்த பின்னர் மீண்டும் வருவதற்கும் மாவட்டத்தினுள் ஓடிய கிலோ மீட்டர்களின் அளவை பதவிநிலை அலுவலரால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். இதற்கான தகுந்த படிவங்களையும், ஆவணங்களையும் உங்களால் நடாத்திச் செல்லல் மிகச் சிறந்ததாகும்.

07. வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிக்கையிட்ட பின்னர் கடந்துள்ள முழுக்காலத்தினுள்ளும் குறைந்த பட்சம் 50 கிலோ மீட்டர்களாவது ஓடியிருக்காத சந்தர்ப்பத்தில் அவ்வாகனங்களுக்காக 50 கிலோ மீட்டருக்கான ஆகக்குறைந்த கட்டணத்தை வழங்க முடியுமென்பதுடன், கி.மீ. 50 -100 க்கும் இடைப்பட்ட தூரம் வரை ஓடிய சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களுக்காக கி.மீ. 100 க்கான கட்டணமும், கி.மீ. 100 க்கும் மேற்பட்ட தூரம் ஓடியிருப்பின், ஓடியிருக்கும் கி.மீ.களுக்கான கட்டணமும் வழங்கப்படல் வேண்டும். இதனைத் தவிர மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தரித்து நிற்றலுக்கான கட்டணம் அந்தந்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு

வழங்கப்படல் வேண்டும். எனினும் வாகனத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறு அல்லது வேறேதும் காரணத்தின் நிமித்தம் வாகனத்தை ஓட்டும் நிலையில் இல்லாதிருப்பின், அவ்வாகனத்திற்கான கட்டணம் வழங்கப்படலாகாது.

08. வாக்களிப்பு நிலையப் பணிக்குழுவினரின் போக்குவரத்து மற்றும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் போக்குவரத்திற்காக அன்றி, நலன்புரி சேவைகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்கள் ஈடுபடுத்தலாகாது.

09. உங்களது அனுமதியுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்து வரப்படும் வாகனங்களுக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள போக்குவரத்துச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள கட்டணங்களின் பிரகாரம், வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் எடுத்து வரப்படும் வாகனங்களுக்காக தாபனக் கோவையின் பிரகாரம் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கமைவாக, மைல் கூலிக் கொடுப்பனவு வழங்கப்படுமென அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். (அவ்வாறான கொடுப்பனவுகளுக்காக இச்சுற்று நிருபம் ஏற்புடையதல்ல.)

10. வாடகை வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல், ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் மற்றும் அதற்கான கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் போன்ற நடவடிக்கைகள் பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுதல் வேண்டுமென்பதுடன், இவ்வாகனங்கள் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள தகவல்களை ஆவணப்படுத்தி குறிப்புக்களை வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளைத் தயவு செய்து மேற்கொள்ளவும்.)

i. வாகன இலக்கம்
ii. வாகனத்திற்கான எரிபொருள் வகை
iii. உரிமையாளரின் பெயர், முகவரி
iv. வாகனத்தின் ஆசன எண்ணிக்கை
v. தேர்தல் பணிகளுக்காக அறிக்கையிடப்பட்ட திகதியும், நேரமும்.
vi. விடுவிக்கப்பட்ட திகதியும், நேரமும்
vii. ஓட்டத் தூரம் கிலோமீட்டர்களில். (வாகனத்தை எடுத்து வருவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் உரியவாறு ஓட வேண்டிய கி.மீ. உட்பட)
viii. ஓட்டத்திற்காக செலுத்தப்பட்ட பணம்.
ix. தரித்து நிற்றலுக்கான விசேட கொடுப்பனவு
x. சாரதிக்கான விசேட கொடுப்பனவு
xi. சேவையிலீடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கிய அலுவலரின் பெயர், கையொப்பம், பதவிப் பெயர்

11. வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ளும் போது இச்சுற்றுநிருபத்திற்கமைவாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் பற்றிக் குறிப்பிடப்பட்ட கடிதமொன்று வாகன உரிமையாளர்களுக்கு வழங்கவும். மேலும் கொடுப்பனவு செய்ததற்கான பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் பெயர், முகவரி என்பனவும் அக்கடிதத்தில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கவும்.

12. தேர்தல் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் நீங்கள் பெற்றுக் கொண்ட வாடகை வாகனத்திற்கான கொடுப்பனவுகள் பூர்த்தி செய்திருக்கப்படல் வேண்டியதுடன், அக்கொடுப்பனவுகள் பூர்த்தியான பின்னர் மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தை பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்கள் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.'

13. வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்படுவது, உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் என்பதும், குறித்த கொடுப்பனவுகள் பிறிதொரு மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் அல்லது தேர்தல்கள் செயலகத்தில் மேற்கொள்ளப்பட மாட்டாதென்பதனால் அவ்வலுவலகங்களில் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டாமென அவர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

14. மேலும் சுற்று நிருப இலக்கம் PE/2024/37 இல் உள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம், இலங்கை பொலிசாரினதும், பாதுகாப்புப் பிரிவினரதும் தேவைப்பாடுகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வாடகை வாகனங்களுக்கான இந்த கட்டணங்களின் பிரகாரம் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளில் குறித்த கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும். எவ்வாறாயினும் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களை உரிய தேர்தல் அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமானதாகுமென பிரிவுக்குப் பொறுப்பான சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு மேலும் அறியத் தருகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,

பிரதிகள் :-

01. பொலிஸ் மாஅதிபர் (ப.க.) பொலிஸ் தலைமையகம் - தேர்தல் பணிகளுக்காக இலங்கைப் பொலிசாருக்குத் தேவைப்படும் வாடகை அடிப்படையிலான தனியார் வாகனங்களுக்கான PE/2024/37 இலக்க சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தல்கள், கட்டணங்கள் என்பவற்றை அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ள முடியும். கட்டணங்களை இலங்கைப் பொலிஸ் திணைக்களத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்குதல் வேண்டும்.

02. சிரேட்ட பொலிஸ் மா அதிபர் (சமூக பொலிஸ்,சுற்றுலா,முதலீடு மற்றும் தேர்தல்கள்) } தயவுடன் தகவலுக்காக

03 கணக்காய்வாளர் நாயகம்
04. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்)
05. தலைமை நிதி அலுவலர்
06. தலைமை கணக்காளர்
07. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்
} தயவுடன் தகவலுக்காக

# மாதிரி விண்ணப்பப் படிவம்
# பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14
# வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்காக விண்ணப்பித்தல்

I. வாகனத்தின் பதிவு இலக்கம் :

II. வாகனம் 4 WD வசதி கொண்டதா ? (ஆம் / இல்லை)*

III. எரிபொருள் வகை : பெற்றோல் / டீசல் / சுப்பர் பெற்றோல் / சுப்பர் டீசல்/ மின்சாரம்*

IV. வாகனத்தின் பயணிகள் ஆசனங்களின் எண்ணிக்கை :

V. வாகன உரிமையாளரின் :
- பெயர் :
- முகவரி :
- தேசிய அடையாள அட்டை இலக்கம் :

VI. சாரதியின் பெயர் :
(சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்பிரதியை இணைக்கவும்)

VII. வாகன உதவியாளரின் பெயர் :
(26 ஆசனங்களுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு மாத்திரம்)

VIII. பொதுவாக வாகனத்தை நிறுத்தி வைக்கும் இடத்தின் முகவரி :

IX. மேற்படி VIII குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலிருந்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கான தூரம் (ஒருவழிப் பயணம்) கிலோ மீற்றர் :

X. வாகனத்திற்காகப் பெறப்பட்டுள்ள காப்புறுதிச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் :
(காப்புறுதி சான்றிதழின் நிழற்பிரதியை இணைக்கவும்)

தேர்தல் கடமைகளின்போது வாகனத்திற்கு ஏற்படுகின்ற எந்தவொரு விபத்திற்கு, சேதத்திற்கு அல்லது தொழில்நுட்பக் கோளாறு ஆகியவற்றுக்கு ஏற்படுகின்ற செலவுகளை தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்க மாட்டேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

திகதி :- 2024.

.............................................
வாகன உரிமையாளரின் ஒப்பம்
பெயர் :-

**விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி :**

தெரிவத்தாட்சி அலுவலர்
மாவட்ட செயலகம் (கச்சேரி)
.................................................. (உரிய மாவட்டத்தின் பெயர்)

* (தேவையற்ற வசனங்களை வெட்டிவிடவும்)